Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 29 வெள்ளிக்கிழமை (15.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 20

# மதியுரைஞர் பாலா காலமானார்



அன்ரன் பாலசிங்கம் - அடேல் பாலசிங்கம் தம்பதியர் கடைசியாக எடுத்துக்கொண்ட படம் இது. பாலாவின் மறைவுக்கு சரியாக மூன்று வாரங்களுக்கு முன்னர் லண்டனில் அவர்களது இல்லத்தில் 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியரின் கமராவில் பதிவாகியதுதான் இப்படம்.

கொழும்பு, டிசெம்பர் 15

கொடிய புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் மதியுரைஞரும், தத்துவாசிரியருமான மார்க்கண்டு ஸ்ரனிஸ்லஸ் அன்ரன் பாலசிங்கம் (வயது 68) லண்டனில் நியூமோடனில் உள்ள தனது இல்லத்தில் நேற்று லண்டன் நேரப்படி பிற்பகல் 1.45 மணியளவில் (இலங்கை நேரப்படி முன்னிரவு 7.15 மணியளவில்) காலமானார்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து அதன் அரசியல் மதியுரைஞராக செயற்பட்டு வந்த அவர் சிங்கள அரசுடன் நடைபெற்ற பேச்சுக்களில் இறுதியாக நடைபெற்ற ஜெனிவாப் பேச்சு தவிர்ந்த அனைத்து பேச்சுகளிலும் கலந்துகொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

35 வருடங்களாக நீரிழிவு நோயினாலும், பின்னர் சிறுநீரகக் கோளாறினாலும் பாதிக்கப்பட்டிருந்த அவர் கடந்த சில ஆண்டுகளாக லண்டனில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்தார். (06ஆம் பக்கம் பார்க்க)

விசேட கட்டுரை 06 ஆம் பக்கத்தில் சாலை வரவேற்ற சாமன்யர் பாலா

## 'தேசத்தின் குரல்' என்ற பட்டம் வழங்கி பாலாவுக்கு தலைவர் பிரபா கௌரவம்!

### துயரத்தின் சுமை ஆன்மாவை அழுத்த உணர்ச்சிப் பெருக்கோடு அவர் அறிக்கை

மதியுரைஞர் பாலாவின் மறைவுக்கு தனது ஆழ்ந்த துக்கத்தை வெளிப்படுத்தியிருக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன், பாலாவுக்கு 'தேசத்தின் குரல்' என்ற கௌரவ பட்டத்தை வழங்கி மதிப்பளித்திருக்கிறார்.

இதுதொடர்பாக தலைவர் பிரபாகரன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல் இராஜதந்திர நகர்வுகளில் எனக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்ட எமது தேசத்தின் ஒளி விளக்கு இன்று அணைந்துவிட்டது. ஆலோசனை வேண்டி, ஆறுதல் தேடி ஓடுவதற்கு பாலாண்ணை இன்று என்னுடன் இல்லை. இவரது மறைவு எனக்கு மாத்திரமல்ல தமிழீழ தேசத்திற்கே இட்டு நிரப்ப முடியாத பேரிழப்பு.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே விரியும் காலமாக மனித வாழ்வு நிலைக்கிறது. இந்த வாழ்வுக்காலம் எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரியாக, ஒத்ததாக, ஒருசீராக அமைவதில்லை. காலச் சீரற்றதாக ஒருவருக்குக் கூடி, மற்றவருக்குக் குறுகி, இன்னொருவருக்கு அதிகம் நெடுத்து கூடிக் குறைந்து செல்கிறது. துரதிஷ்டவசமாக, பாலாண்ணையினது வாழ்வு இடைநடுவில் நின்றுபோய் விட்டது. தீவிரம்பெற்றுள்ள எமது விடுதலைப் போருக்கு அவர் நிறையப் பணிகளை ஆற்றவேண்டியிருக்கின்ற தருணத்தில் அவருக்கு மரணம் சம்பவித்திருக்கிறது. இதனை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. என் உள்ளத்தை உடைத்து, நெஞ்சத்தைப் பிளக்கிறது. கட்டுக்கடங்காத காட்டாறு போல சீறிப்பாயும் உணர்ச்சிப் பெருவெள்ளத்தை என்னால் வார்த்தைகளால் கொட்ட முடியாது. மனித மொழியில் இதற்கு இடமுமில்லை.

பழக ஆரம்பித்த நாள் முதலே எமக்கிடையே ஒரு இனம்புரியாத புரிந்துணர்வு ஏற்பட்டது. அந்தப் புரிந்துணர்வால் எழும் பற்றுறவால் பிணைந்துகொண்டு, எமது உறவு நல்லுறவாக வளர்நது நட்புறவாகப் பரிணமித்தது. சிந்தனையாலும் செயலாலும் ஒன்றுபட்ட மனிதர்களின் சங்கமமாக அந்த உறவு மலர்ந்தது. தினம் தினம் நாம் பகிர்ந்துகொண்ட வாழ்பனுபவத்தில் வலிமைபெற்று வளர்ந்தது. சாதாரண மனித உறவுகளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. காலத்தால் கனிந்து, வரலாற்றால் வடிவம் பெற்ற ஒரு அலாதியான இலட்சிய உறவு அது (06ஆம் பக்கம் பார்க்க)

## புதனன்று லண்டனில் இறுதி நிகழ்வுகள்

கொழும்பு, டிசெ. 15

நேற்று லண்டனில் மறைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் இறுதிக்கிரியைகள் பெரும்பாலும் அடுத்த வார முற்பகுதியில் - அனேகமாக அடுத்த புதன்கிழமை 20ஆம் திகதி - லண்டனில் இடம்பெறும் என்று நேற்று

(06 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகத்தில் மூன்று நாள்களுக்கு தேசிய துக்கதின

கிளிநொச்சி, டிசெ. 15

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவை யொட்டி தமிழர் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் இன்று முதல் மூன்று நாள்களுக்கு தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படும் என நேற்றிரவு வன்னியில் அறிவிக்கப்பட்டது.

இத்தினங்களில் கோலாகல கொண்டாட்ட நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டு மௌனாஞ்சலிகள், இரங்கல் நிகழ்வுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## நிபுணர் குழுவின் பரிந்துரைகளோடு அரசுக்கு எந்த சம்பந்தமும் இல்லை!

### அமைச்சர் யாப்பா கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 15

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணு முகமாக நிபுணர்குழுவால் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகளுக்கும் அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இப்பரிந்துரைகளை சர்வகட்சி மாநாட்டில் ஆராய்ந்த பிறகே இவை தொடர்பாக அரசு ஒரு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரும்.

- இவ்வாறு அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்றுத் தெளிவுபடுத்தினார்.

நிபுணர்குழு இப்பரிந்துரைகளை சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுடன் கலந்தாலோசிக்காமல் தயாரித்துவிட்டது என்றும் அவ்வாறு செய்திருக்கக் கூடாது என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

கொழும்பில் உள்ள தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகள் சர்வகட்சி மாநாட்டில் ஆராயப்பட்டு ஒரு முடிவெடுப்பதற்குமுன் அவை ஊடகங்களில் வெளிவந்துவிட்டன. இதை யார் வெளியிட்டார்கள் என்பது எமக்குத் தெரியாது.

இப்பரிந்துரைகள் தொடர்பாக பல வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அரசால் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகள் இவை எனக் கூறப்படுகின்றது. உண்மையில் இப்பரிந்துரைகளுக்கும் அரசிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. யாரும் இவற்றை அரசுடன் தொடர்பு படுத்தவும் வேண்டாம்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காகவே இந்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ஹர்த்தாலால் வழமை நிலை பாதிப்பு

வவுனியா, டிசெ.15

வாகரையில் அப்பாவித் தமிழ் மக்கள் அரச படைகளின் குண்டுவீச்சில் உயிரிழந்தமைக்குக் கண்டனம் தெரிவித்து வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அங்கு வழமை நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

வவுனியா நகரப்பகுதி சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் மந்தநிலையில் காணப்பட்டன. ஜி. சீ. ஈ. பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் உரிய நேரத்துக்கு பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்கினர்.

மன்னாரிலும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ-164)

## மட்டு. மியான்குளம் பகுதியில் புதன் இரவு நேரடி மோதல்!

### ஆறு புலிகளைக் கொன்றதாக கூறுகிறது இராணுவம்

மட்டக்களப்பு, டிசெ 15

கிழக்கில் மட்டக்களப்பு - மியான்குளம் பகுதியில் புதன்கிழமை இரவு விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றிருக்கிறது.

அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும், அதன் பின்பு படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலின் பின்னரே அங்கு மோதல் வெடித்தது என்றும் பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்தது.

இந்த மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்று படையினர் கூறியுள்ளனர். அவர்களின் சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும், இது குறித்துப் புலிகள் எந்த [illegible]

## மலையகப் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, டிசெ.15

சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்துத் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் போராட்டம் நேற்றுப் பத்தாவது நாளாகத் தொடர்ந்தும் நடைபெற்றது.

இதேவேளை, இவ்வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கு ஏற்பாடாகியிருந்ததாக அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

தொழில்சங்கத் தலைவர்கள் தொழில் அமைச்சரை நேற்று மாலை சந்தித்து கலந்துரையாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமு நாகம்மா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமு நாகம்மா நேற்று (14.12.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமுவின் அன்பு மனைவியும் குணசேகரன் (ஜேர்மனி), ஞானசேகரம், சந்திரசேகரம், இலங்கேஸ்வரன் (ஜேர்மனி), உதய சேகரம், சறோஜா தேவி, மஞ்சுளாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும் யோகேஸ்வரி (ஜேர்மனி), சகுந்தலாதேவி, சறோஜா, தேவகி (ஜேர்மனி), ரஜிந்தினி, நவம் வன்னியசிங்கம் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணிமண்டப வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*
(56874)
தகவல்:
**பிள்ளைகள்.**

## நாகலிங்கம் ஜெயேந்திரன் [இந்திரன்]

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் ஜெயேந்திரன் (இந்திரன்) நேற்று (14.12.2006) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சூசைமுத்து - கொலஸ்ரிக்கா தம்பதியரின் மருமகனும் யசிந்தாவின் அன்புக் கணவரும் மயூரிகா, மேனகா, டெல்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராணி, அமரர் இரத்தினசிங்கம், குணசிங்கம், கத்தரின் அம்மா, தேவி, விமலா, இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சி, தவப்பிரகாசம், கமலா, சந்திரா, சாந்தி, வசந்தி, ரவி, பிலேந்திரன் காலஞ்சென்ற சூசைமுத்து, மரியதாஸ், மரியாம்பிள்ளை, ஜெயசீலன், தங்கராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் வீதி, சாவகச்சேரி.*
தகவல்:
**குடும்பத்தினர்.**

## எஸ். எம் அல்பிரட்

[அல்பிரட் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - ஊர்காவற்றுறை]



கரம்பனைப் பிறப்பிடமாகவும், 12, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஊர்காவற்றுறை முன்னாள் பிரபல வர்த்தகர் திருவாளர் எஸ்.எம். அல்பிரட் காலமானார்.

அன்னார் அந்தோனியாப்பிள்ளை மேபிளினின் அன்புக் கணவரும் வசந்தி (UK), ராஜன், சாந்தி (Holland), றஞ்சன் (UK), காலஞ்சென்ற கொண்சி, அருட்சகோதரி ஞானதர்சி AC (கார்மேல் மடம், கல்முனை), மேசி (UK), அருட்சகோதரி அஞ்சலிக்கா AC (லூர்த்துமடம் கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, துரைசிங்கம், எலிசபேத் மற்றும் சாமிநாதர் ஆகியோரின் சகோதரரும் ஜெயசீலன் (UK), அருமைநாயகம் (Holland), நிம்மி (UK), எரிக் வேதநாயகம் (UK) ஆகியோரின் மாமனும் ஜெயச்செல்வி, அன்ரன், விக்ரர், உதயசெல்வி, பிரியதர்சினி, ரூத்திக்கா, தர்சிகா, டறியோ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(56877)
தகவல்:
**மேபின் அல்பிரட் (மனைவி).**

## சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (14.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் - சிவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் விஜிதரன், சிவகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, வியாலாட்சி, தெய்வநாயகி, செல்வநாயகி நடராஜா ஆகியோரின் சகோதரரும் அமர்களான தவராஜா, கனகராஜா, விமலாதேவி மற்றும் செல்வராஜா, துரைராஜா, சரஸ்வதி (பிரான்ஸ்), வரதராஜா, யோகராஜா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி சந்தியாப்பிள்ளை பிலோமினா

[செல்லம்மா அக்கா]



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 23, சுவாட்ஸ் லேன், யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தியாப்பிள்ளை பிலோமினா நேற்று (14.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை - கபிரியேலா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா, விஞ்சர், வில்லியம், நீக்கிலஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்ரன் மரியநாயகம், சேவியர் வில்பிறட், டொமினிக் அல்பிறட், அமலேஸ்வரி, சித்திரா (ஆசிரியை, யா/ புனித ஜோண் பொஸ்கோ) ஆகியோரின் அன்புத் தாயும் தவமலர், லூட்ஸ்மேரி திரேசா சிறிய புஸ்பம் (ஆசிரியை- யா/ புனித ஜோண் பொஸ்கோ), தேவதாசன் ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயரூபன், ஜெனிற்றா, பிராங்லின், ஜெனதா, டென்சியா, ஜெரின்சியா, தீபனா, நிரூபனா, சீத்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இறுதி ஆராதனைக்காக யா/ புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*23, சுவாட்ஸ் லேன்,*
*யாழ்ப்பாணம்.*
(56879)
தகவல்:
**குடும்பத்தினர்.**

---

**IBS** சுண்டுக்குளி, நல்லூர்

A/L 2008 புதிய
அலகுகள் ஆரம்பம்
16.12.2006 10 a.m.
கணக்கீடு P. பகீரதன்
பொருளியல் G. பிரதீபன்
வணிகக்கல்வி K. முரளி
அளவையியல் உதயன்
அனுமதிகள் உடன் பெறவும்.

**IBS** சுண்டுக்குளி, நல்லூர்

தரம் 3 வரை
ஆரம்பமாகிவிட்டன.
விசேட புலமைப்பரிசில்
வகுப்புகள் ஆசிரியர் : சபேசன்
A/L 2008 BATCH
ACC., ECO.,
COM., LOG.

## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் - இணுவில்
மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்
வடமராட்சியின் பல ஆயிரக்கணக்கான
மாணவர்களின் நன்மதிப்பைபெற்ற பொருளியல்
ஆசான் எம் நிறுவனத்தில்

### பொருளியல்

**M.C. சுதாகரன் B.Com (Hons)**
நாளை ஆரம்பம்
யாழ். நகரில் - சனி - ஞாயிறு
**A/L 2007, A/L Day**
12 - 1 பணம், வங்கி,
பொது விலைமட்டம்
**1 - 2 Paper Class**
**A/L 2008, 10 - 12**
★ நெகிழச்சிக் கோட்பாடு
★ சந்தைச் சமநிலை
சகல பிரிவுக்கும் விடுமுறை மேலதிக
வகுப்புகள் நடைபெறும்.
Note: இதே வகுப்புகள் A/L 2007, 2008,
Paper Class அனைத்தும்.
★ பொருளியற் கல்லூரி இணுவில்
★ BARATHY சித்தங்கேணி இவற்றிலும்
சனி - ஞாயிறு வகுப்புகள் நடைபெறுகின்றன.
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

## BARATHY

**சித்தங்கேணி**

### A/L DAY CLASS

கலை - வர்த்தகப்பிரிவுகள் புதிய
வகுப்புகள் ஆரம்பமாகி
நடைபெறுகின்றன. யாழ். நகரின்
பிரபலமிக்க ஆசிரியர் குழுவினால்
உங்களுக்கான அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.

## கண்ணீர் அஞ்சலி



பல வருடங்களாக யாழ். மாவட்டத்தில் புற்றுநோய் நிபுணர் இல்லாமல் கஷ்டப்பட்ட வேளையில் மனம்வைத்து முன்வந்து பலவித கஷ்டங்களுக்கு மத்தியில் புற்றுநோய் சிகிச்சையினை தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி உட்பட பல மருந்துவமனைகளில் ஆரம்பித்து அரும்பணியாற்றும் டாக்டர்

**ந. ஜெயகுமார்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி கமலாவதி நடராசா**
அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை
அபிவிருத்திச் சபையும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலா மாணிக்கவாசகர்

திருமதி கமலா மாணிக்கவாசகர் (Formerly staff St. Bridget's Convent, Colombo) ஸாம்பியாவில் நேற்று (14.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கரணவாய் வடக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சட்டத்தரணி பொ. கணபதிப்பிள்ளை (நடுவில்), காலஞ்சென்ற மரகதவல்லி கணபதிப்பிள்ளை தம்பதியரின் அருமை புத்திரியும் காலஞ்சென்ற சிவகுருநாதன் (இளைப்பாறிய ஆசிரியர், முன்னாள் உடுப்பிட்டி கிராம சபை தலைவர்), காலஞ்சென்ற சௌந்தரிபிள்ளை சிவகுருநாதன் தம்பதியரின் அருமை மருமகளும் மாணிக்கவாசகரின் (முன்னாள் பிரதம கணக்காளர், கிழக்கிலங்கை கடதாசி கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும் சஞ்சீவ் (ஸாம்பியா), காலஞ்சென்ற பிரதீவ், பிரியங்கா ஷாலினி ஆகியோரின் அன்புத் தாயும் Dr. வைகுந்தனின் (Teaching Hospital, Kegelle) மாமியும் மகாதேவா (பிரசித்த நொத்தாரிசு), மகேந்திரன் (MS Accounting Systems), காலஞ்சென்ற சட்டத்தரணி சரோ, கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திரிவேணி (Ladies College, Colombo-7), சாரதா (SLANI) Dr. கேதீஸ்வரநாதன் ((MOH, Dehiwela - Mt. Lavinia) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Mrs. Priyanka Shalini Vykunthan**
[illegible]
T.P. 2554081.

*பாடசாலை வீதி,*
*கரணவாய் வடக்கு,*
*உடுப்பிட்டி.*

---

**யாழ். மாவட்ட செயலக சிற்றுண்டிச்சாலை**

### கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ். மாவட்டச் செயலக சிற்றுண்டிச்சாலையை 01.01.2007 ஆம் திகதியிலிருந்து பொறுப்பெடுத்து நடத்துவதற்குத் தகுதிவாய்ந்தவர்களிடம் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களை வழங்கும் திகதி:
2006.12.18 தொடக்கம் 2006.12.22 ந.ப. 12 மணிவரை

கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல்:
2006.12.22 பி.ப. 2 மணிவரை.

கேள்விப்பத்திரங்கள் பெறுமிடம் :
**செயலாளர், மாவட்டச் செயலக நலன்புரிக்கழகம்,**
**யாழ்ப்பாணம். (மோட்டார் போக்குவரத்து திணைக்களம்)**

(சி-51548)
செயலாளர்.

## துயர் பகிர்கின்றோம்



நல்லூர் அரிமாக்கழக உறுப்பினரும்
ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளருமான
**லயன் அ.இ. சுரேஸ்**
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி கமலாவதி இராமலிங்கம்**
அவர்களின் மறைவினால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(56871)
நல்லூர் அரிமாக்கழக உறுப்பினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கிராம
அலுவலராகக் கடமையாற்றும்
வை. சுரேஸ் J/97 அவர்களின்
அன்புத் தந்தை
**சுப்பிரமணியம் வையாபுரி**
அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
நல்லூர் பிரதேச செயலகம்.
(56870)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
05 . 02 . 1939



**மறைவு**
16 . 11 . 2006

**இராசையா - விக்ரர் இராசரத்தினம்**

அவர்களுடைய 31ஆம் நாள் நினைவு ஆராதனை நாளை (16.12.2006) சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெறும். ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம். தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். அன்னாரின் மறைவின்போது உடன் இருந்து உதவியோருக்கும் அனுதாபச் செலுத்தி ஆறுதல்கள், உதவிகள் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*டச்சு வீதி, உடுவில்.*
(56878)
**குடும்பத்தினர்.**


# மரண அறிவித்தல்கள்


## சுப்பையா குமாரசாமி [கோமதி விலாஸ்]

ஐயனார் கோயில், கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பையா குமாரசாமி நேற்று (14.12.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பையா-பொன்னம்மா தம்பதியரின் புதல்வரும் நமசிவாயம், பரமேஸ்வரி, சற்குணம், சந்திரபதி, கோமதி, யோகேஸ்வரி, தெய்வேந்திரம், சரஸ்வதி, மகேந்திரம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஐயனார் கோயில், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
**குடும்பத்தினர்.**

## முருகன் கந்தையா

அளவெட்டி தெற்கு, கேல்வத்தையைச் சேர்ந்த முருகன் கந்தையா நேற்று (14.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும் நாகரத்தினம், ஐயாத்துரை (நோர்வே), குணசேகரம், செல்வரத்தினம், இந்திரசேகரம், சந்திரசேகரம் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேல்வத்தை, அளவெட்டி தெற்கு.*
(56873)
தகவல்:
**இந்திரசேகரம் (மகன்).**

## முத்துத்தம்பி மகாதேவா

[ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - விவசாயத்திணைக்களம்]



உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத் தம்பி மகாதேவா நேற்று (14.12.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விமலாதேவியின் அன்புச் கணவரும் மதிவதனன் (ஸ்கந்தபுரம்), மதியழகன் (லண்டன்), மைதிலி (லண்டன்), மதுரா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்கருதி வடமராட்சியில் 3 கட்டடங்கள்

## அரச அதிபர் திறந்துவைத்தார்

யாழ்ப்பாணம்,டிசெ.15

வடக்கு -கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சியில் மூன்று புதிய கட்டடங்கள் அமைக்கப்பட் டுத் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ் சிறுவர் கல்விக் கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறு வனம் இந்தக் கட்டடங்களை ஆழிப்பேரலை யால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி அமைத்துள்ளது.

வடமராட்சி வடக்கு, பொலிகண்டி கிழக்கு ஆகிய இடங்களில் பல்நோக்கு மண்டபம், உற்பத்திப் பகுதியுடன் கூடிய பயிற்சி நிலை யம் ஆகியவையும், வடமராட்சி வடக்கில் சன சமூக நிலையமும் அமைக் கப்பட்டுள்ளன.


அரச அதிபர் நாடா வெட்டி கட்டடத்தை திறந்துவைக்கிறார்.

இவற்றின் திறப்பு விழா கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை பிர தேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற் றது.

பல்நோக்கு மண்ட பம், பயிற்சி நிலையக் கட் டடம் ஆகியவற்றை யாழ். அரச அதிபர் கே.கணே ஸும் சனசமூக நிலையக் கட்டடத்தை பருத்தித் துறைப் பிரதேச செயலரும் திறந்துவைத்தனர். (202)

# இடம்பெயர்ந்த 353 குடும்பங்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில்

குருநகர்,டிசெ.15

யாழ்.நகரில் இயங்கிவரும் மூன்று நலன் புரி நிலையங்களில் 353 குடும்பங் களைச் சேர்ந்த 1432 பேர் தொடர்ந்தும் தங்கியுள் ளனர் என யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாவாந்துறை சென்.நீக்கலஸ் நலன்புரி நிலையத்தில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 297 பேரும், கதீஜா நலன்புரி நிலையத்தில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 237 பேரும், யாழ். அடைக்கல மாதா நலன்புரி நிலையத் தில் 203 குடும்பங்களைச் சேர்ந்த 893 பேரும் தங்கியுள்ளனர்.

இதேவேளை, யாழ்.மரியா ஹோட்டல் நலன்புரி நிலையம் கடந்த 4ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டது. (202-51)

# மரக்கறி வகைகளின் விலை விஷம் போல் ஏறுகின்றது

குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை கள் நாளுக்குநாள் உயர்ந்த வண்ணம் இருப் பதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

செயற்கைப் பசளை மற்றும் கிருமி நாசி னிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற் குக் காரணம் என உற்பத்தியாளர் தரப்பில் கூறப்படுகின்றது.

குறிப்பாகத் திருநெல்வேலி, கல்வியங் காடு ஆகிய சந்தைகளில் மரக்கறிகள் அதிக ரித்த விலையில் விற்கப்படுகின்றன.

கத்தரிக்காய் கிலோ 300 ரூபாவாகவும், பூசணிக்காய் கிலோ 180 ரூபாவாகவும், வாழைக்காய் கிலோ 100 ரூபாவாகவும், முருங்கைக்காய் கிலோ 400 ரூபாவாகவும் பயற்றங்காய் கிலோ 200 ரூபாவாகவும் ஒரு பிடி கீரை 50 ரூபாவாகவும் விற்பனை செய் யப்படுகின்றன.

ஏனைய மரக்கறிகளும் மிகவும் அதிக விலையிலேயே விற்கப்படுகின்றன.

முட்டை ஒன்று 40 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

குடாநாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடி களை எதிர்கொள்ளும் இந்நிலையில் மரக் கறி, மீன், முட்டை போன்றவற்றின் விலை அதிகரிப்பால் சிறுவர்கள், மாணவர்கள், நோயாளர்கள், முதியோர்கள் ஆகியோர் போசாக்கின்றி வாடும் நிலை ஏற்பட்டுள்ளது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (202-79)

## யாழ்.மாநகர பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி வரை நல்லூர், யாழ். நகரம், வண்ணார்பண்ணை, அரியாலை, குருநகர் ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற் றப்படும் என மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்தார். (202)

# விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோருக்கும் சத்தான உணவு வழங்கப்படுவதில்லையாம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

தற்போது யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருள்களின் தட்டுப்பாட்டினால் பிரதேச மற்றும் கிராமிய மருத்துவமனை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களும் உணவுக்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

பொருள்களின் தட்டுப்பாட்டை அடுத்து மருத்துவமனைகளில் மீன், முட்டை, கரு வாடு கீரை, பால் போன்றவை நோயாளர் களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் -

தினமும் மரக்கறி உணவு வழங்கப்படு கின்றபோதிலும் உப்பு, புளி, தேங்காய்ப் பால் ஆகியவை இல்லாத கறிகளே வழங் கப்படுவதாகவும் நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (202)

## வருமானம் இழந்தவர்களுக்கு சேவாலங்கா உதவி

காரைநகர் கிராமத்தில் தொழில் வாய்ப் பின்றி அன்றாட வருமானத்தை இழந்துள்ள 242 குடும்பங்களுக்கு சேவாலங்கா நிறு வனம் உலர்உணவுப் பொருள்களை வழங்கி யுள்ளது.

மீன்பிடி, தச்சு, மேசன் போன்ற தொழில் களை மேற்கொள்ள முடியாது, வருமானம் இழந்த நிலையில் பல குடும்பங்கள் உள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கு காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் கோரிக்கைக்கு ஏற்ப சேவாலங்கா உலர்உணவுப் பொருள்களை வழங்கியது என நிறுவனத்தின் திட்டமிடல் முகாமையாளர் க.சபேசன் தெரிவித்தார். (202)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.கல்வி வலயத்தில் இறுதியாக நடை பெற்ற முன்சேவைக் காலப் பயிற்சியில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கும், பயிற்றப் பட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்கும், ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கும் மெய்வன்மை விளையாட்டுத் தொடர்பான செயலமர்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். ஆசிரியர் வள நிலையத்தில் நடை பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார். (202)

# மீனின் விலை குறைந்துள்ளது

பருத்தித்துறை,டிசெ.15

வடமராட்சிப் பிரதேசத்தில் தற்போது மீனின் விலை சற்றுக் குறைவடைந்துள்ளது. மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையைப் படையினர் சிறிதுதி தளர்த்தியிருப்பதனைத் தொடர்ந்து இதுவரை ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ மீன் தற்போது ஐநூறு ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருவதைக் காணக்கூடிய தாக உள்ளது. (203-118)

## கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் கவனத்துக்கு

அச்சுவேலி,டிசெ.15

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற் சியை முடித்து அடுத்த ஆண்டில் பாடசாலை களில் நியமனம் பெறவுள்ளோரின் விவரங் களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் திரட்டி வருகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் தமது விவரங் களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் *'நிர்வாகச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், கனடா இல்லம், கொழும்பு - 15'* என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு சங்கத்தின் செயலாளர் எஸ்.சரவணப வானந்தன் கேட்டுள்ளார். (202)

## கற்றல் உபகரணங்கள் வடமராட்சியில் இல்லை

பருத்தித்துறை,டிசெ.15

வடமராட்சிப் பகுதியில் பாடசாலை உப கரணங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளது.

பாடசாலைகளின் அடுத்த ஆண்டுக்கான தவணை ஜனவரி இரண்டாம் திகதி ஆரம்ப மாக உள்ள நிலையில் புதிய வகுப்புகளுக் குச் செல்ல ஆயத்தமாகிவரும் மாணவர்கள் தமது கற்றல் தேவைகளுக்கான கொப்பிகள் மற்றும் எழுதுகருவிகளை வாங்குவதற்கு முனைப்புக் காட்டி வருகின்றனர்.

புத்தக விற்பனை நிலையங்களில் இப் பொருள்கள் குறைந்த அளவுகளிலேயே கையிருப்பில் உள்ளதால் மட்டுப்படுத்தப் பட்ட அளவுகளிலேயே இவை வழங்கப் பட்டு வருகின்றன. (203-118)

# சிக்குன் குனியாவைத் தடுக்கும் நடைமுறைகள்

குடாநாட்டில் சிக்குன் குனியா தற்போது தீவிரமாகப் பரவி வருகின்றது.இதனைக் கட்டுப்படுத்துவதற்குப் பல்வேறு நடை முறைகளைக் கையாளலாம்.

சிக்குன்குனியா நுளம்புகள் மூலம் பர வும் வைரஸ் நோயாகும். ஈடிஸ் எயிப் டிய்(Aedes Aegypti),ஈடிஸ் எல்போபிக் டஸ்(Aedes Albopictus) எனும் இரு வகை நுளம்புகளே இந்நோயைப் பரப்புகின்றன.

கடும் காய்ச்சல், தலையிடி, வாந்தி, நிண நீர் கணுக்களில் வீக்கம், மூட்டுநோ, மூட்டு வீக்கம், தசை நோ என்பன இந்நோயின் அறிகுறிகளாகும்.

* இந்தநோயைப் பரப்பும் இவ்விரு நுளம்புகளும் காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 9 மணிவரையும், மாலையில் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை கூடு தலாக கடிக்கும். அந்நேரங்களில் நுளம்பு சுகதேகியைக் கடிக்காத வகையில் உரிய பாதுகாப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

* யன்னல், கதவுகள் ஊடாக நுளம்பு கள் உட்புகாத வகையில் மூடி வைத்தல், நுளம்பு வலைகள், நுளம்புத் திரிகளைப் பாவித்தல், உடலை முழுமையாக மூடும் வகையில் உடைகளை அணிதல்.

* நுளம்பு பெருகாமல் இருப்பதற்கு அவை பெருகும் இடங்களை அழித்தல், கைவிடப்பட்ட மற்றும் பாவனையிலுள்ள நீர்த்தொட்டிகளைக் கழுவுதல், தொட்டி களில் நீரைத் தொடர்ந்து தேக்கி வைக்கா மல் அவைகளை அடிக்கடி மாற்றுதல்.

* இக்காய்ச்சல் பீடித்தவர் பூரணஓய்வு எடுக்கவேண்டும். பரசிற்றமோல் வில்லை களைப் பாவிக்க வேண்டும். காய்ச்சலின் தாக்கம் அதிகமாக இருந்தால் வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டியது அவசி யம்.

*(யாழ்.சேவாலங்கா மன்றத்தின் அனு சரணையுடன் யாழ். சுகாதாரத் திணைக்களத் தால் வெளியிடப்பட்டுள்ள சிக்குன்குனியா கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான துண்டுப்பிரசுரத்திலிருந்து பெறப்பட்ட வழிகாட்டிகள் இவை.)*

## போக்குவரத்து வசதியின்றி ஜி.சீ.ஈ. மாணவர்கள்

தென்மராட்சி,டிசெ.15

சாவகச்சேரி நகரப்பகுதி பாடசாலை களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பிற்பகல் போக்கு வரத்து வசதியின்மையால் பெரும் சிரமங் களை எதிர்நோக்குகின்றனர்.

765, 775, 811 ஆகிய இலக்க மார்க்க பேருந்து சேவைகள் பிற்பகல் 3 மணியுடன் நிறுத்தப்படுவதால் பரீட்சை முடிந்ததும் பேருந்து நிலையத்தில் மாணவர்கள் காத்தி ருக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

## தீவகத்தில் சிக்குன்குனியா மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தீவகத் தில் இலவச சிக்குன்குனியா மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் -

வேலணை மேற்கு நடராசா வித்தியா லயத்தில் அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3.30 மணிவரையும் மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் நோய்ப் பரி சோதனை, மருந்து வழங்கல் மற்றும் ஆலோ சனை வழங்கல் என்பனவற்றுடன் சிறுவர் களுக்கான ஊட்டச்சத்து மருந்துகளும் வழங் கப்படவுள்ளன.

சிவா நறுமணப் பூங்காவின் அனுசரணை யுடன் நடத்தப்படவுள்ள இம்முகாமில் டாக் டர் கே.இராசரட்ணம் சேவையாற்றுவார். (202-88)

## மானிப்பாயில் பால்மா விநியோகம்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று வெள் ளிக்கிழமை வரை சிறுவர்களுக்குப் பால்மா வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவிலுள்ள 3ஆயிரத்து 566 சிறுவர்களுக்கு பால்மா பக்கெற் றுக்கள் தாய் - சேய் நல சிகிச்சை நிலையங்களில் வைத்து வழங்கப் பட்டு வருகின்றன. (202-51)

## வடமராட்சியில் விளம்பரப் பலகைகளை அகற்றுமாறு படையினர் பணிப்பு

பருத்தித்துறை,டிசெ.15

வடமராட்சிப் பகுதியில் பிரதான வீதிகளில் உள்ள விளம்பரப் பலகைகள் அனைத்தையும் அகற்றுமாறு படையினர் உத்தரவிட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து கடை உரிமையாளர்கள் தமது கடைகளின் பெயர்ப்பலகைகள் மற்றும் விளப்பரப்பலகைகளை அகற்றி வருவ தைக் காணக்கூடியதாகவுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த வடமராட்சிப் பிரதேச வர்த் தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்வதற்கு எந் தவிதமான பொருள்களும் அற்றநிலையில் கடைகளைக் கட்டாய மாகத் திறக்[illegible] தற் போது வி[illegible] தெரிவித்துள்ளனர். இதனால் நாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம் என்று கூறினர். (203-118)

முதலாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

செல்வி தர்மராசா சகானா

மட்டுவில் தெற்கைப் பிறப் பி மாகக்கொண்ட தர்மராசா பவானி தம்பதிகளின் புதல்வி சகானா இன்று ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் முத லாவது பிறந்த நாளைக் கொண் டாடுகிறார். சகானாகுட்டியை அன்பு அப்பா, அம்மா, அம் மப்பா, அம்மம்மா, அப்பம்மா ஆகியோரும் அண்ணா சந் தோஷ் (ஜேர்மனி), தீபன்மாமா (பிரான்ஸ்), கொழும்பில் உள்ள ஜனா மாமா, ஜெஸ்மின் மாமி மற்றும் உறவினர்கள் அனை வரும் பல செல்வங்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இந்நாளில் வாழ்த்துகிறார்கள்.



89, புதிய செட்டித் தெரு, கொழும்பு - 13.

தகவல்: இ. ஜனதன் (சின்னமாமா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SHAMROCK**
ஈச்சமோட்டை வீதி, யாழ்.
**புதிய கல்வி ஆண்டு 2007**
தரம் 1 முதல் 11 வரை ஆரம்பமாகியுள்ளது.
★ புலமைப்பரிசில் 5
★ Eng.Medium 6,7,8

## ஊர்காவற்றுறையில் செஞ்சிலுவை அலுவலகம்

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பிரிவு அலுவலகம் ஒன்று அமைக் கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச செயலரின் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவின் தற்காலிக தலைவராக ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பி.குமாரசாமி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



## வரவு செலவுத் திட்டம் - 2007

1987ஆம் ஆண்டின் பிரதேச சபைக் கட்டளைச் சட்டத் திற்கிணங்க வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் 2007ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2006.12.13ஆம் திகதி தொடக்கம் ஏழு (07) நாள்களுக்கு அலுவலக நேரத்தில் தலைமை, உப அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதனை அறியத்தருகின்றேன்.

வலி.தெற்கு பிரதேசபை, சுன்னாகம். 2006.12.12
திருமதி ச.சொக்கலிங்கம் செயலாளர், வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம். (சி/51543)

**SATHYA SAI SCHOOL - (PRIMARY) MANIPAY**
**VACANCY For English Teacher**

Qualification - Diploma in English
or
equivalent Qualification
Closing Date 28.12.2006

*Apply to*: **The Chairman,**
Management Committee,
Sathya Sai School, Sothy vembady Lane, Manipay.
**- Principal.** (56830)


## நினைவுகளில் நீங்காத 31ஆம் நாளில்

மண்ணில் மலர்வு 17 ★ 08 ★ 1949 — மண்ணில் நெகிழ்வு 15 ★ 11 ★ 2006



**திருமதி சின்னத்துரை நேசமலர்**

**அன்போடும் பாசத்தோடும் எம்மோடு
இணைந்து பண்புடன் வாழ்ந்த எம்
இனிய அம்மாவே! நீங்கள் எம்மை
வீட்டு மறைந்து போனாலும் உங்கள்
நினைவுகள் என்றும் மாறாது.**

அன்னாரின் துயரச் செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் எமது துயரத்தில் பங்குகொண்டு ஆறுதல் கூறி சகலவிதத்திலும் உதவிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை இல.45/63, களனி கங்கா ராமமாவத்தை, மட்டக்குளி, கொழும்பு 15 இல் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். 0112521856 (56792)
கணவர், பிள்ளைகள், தாய், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### அ.நாகராசா

யாழ்ப்பாணம், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இல.35, 42ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தையில் வசித்தவரும் கொழும்பு மஸ்கன்ஸ் மற்றும் அஸ்பெஸ்ரஸ் சீமென்ற் இன்டஸ்றீஸ் நிறுவனங்களின் பணிப்பாளரும் மானிப்பாய் மருதடி விநாயகர் வழிபடுவோர் சங்க முன்னாள் தலைவருமாகிய அ.நாகராசா சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற அ.சுப்பிரமணியம் (ஸ்தாபகர், அஸ்பெஸ்ரஸ் சீமென்ற் இன்டஸ்றீஸ் மற்றும் மஸ்கன்ஸ் லிமிட்டெட்) அவர்களின் சகோதரரும் கமலாசனியின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரன் (அஸ்பெஸ்ரஸ் சீமென்ற் இன்டஸ்றீஸ், கொழும்பு), விஜயநாதன் (சுவிற்சர்லாந்து), உமாவதி பாலேந்திரன் (அவுஸ்திரேலியா), லோகநாதன் (லண்டன்), உஷாதேவி குலேந்திரன் (லண்டன்), சுகன்யாதேவி சிவகுமார் (லண்டன்), உருத்திரகுமார் (அவுஸ்திரேலியா), நிலாமதி குகனேசன் (அவுஸ்திரேலியா), கணேசராஜா (லண்டன்), காலஞ்சென்ற ஸ்கந்தராஜா, இரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணராணி, வசந்தாதேவி, பாலேந்திரன், ஈஷா, குலேந்திரன், சிவகுமார், நிலந்தி, குகனேசன், கீத்தா, மாதினி, பிரஷாந்தி ஆகியோரின் மாமனும் தர்ஸனன், திவிஷனன், விநோத், கேசவா, ஷானி, லசாந்தன், அதிஷா, ஷெரீக்கா, பிரவீனா, பிரதீஸ், சிவரிஷி, சிவகாமி, நிரோஷன், சிவ ஆரணி, ஆதவன், கீர்த்திகா, கஜானி, கீர்த்தனா, ஸ்கந்தீஸ் ஆகியோரின் பேரனும் அதிரனின் பூட்டனும் சிவானந்தன், குணபூஷணி, காலஞ்சென்ற லவானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.12.2006) காலை 6 மணிக்கு அன்னாரின் இல்லமாகிய இல.35, 42ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தையில் இருந்து பொரளை A F றேமண்ட் மலர்ச்சாலையில் காலை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈமச்சடங்குகளின் பின்னர் கனத்தை இந்து மயானத்தில் மாலை 4 மணிக்குத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P.: 0112581887, 0112363104. (56855)
தகவல்: நா.நகுலேஸ்வரன் (மகன்).

## வெளிவாரி மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.15

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்கள் இதனைக் கவனத்திற் கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.



## சிறு விமானசேவை

**யாழ். - கொழும்பு - யாழ். விமான சேவைகள்**
தனியார் நிறுவனத்தின் நான்கு பேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு:
RAINBOW TRAVELS & TOURS
32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே :
021 222 3237
0115371629
0777535988 } கொழும்பு
(சி/51544)


## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகராலயத்தின் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்து அவன் கழலடி சேர்ந்தவருமான இ.சுரேஸ் அவர்களின் பாசமிகு அன்னை

**திருமதி இராமலிங்கம் கமலாவதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருநெல்வேலி. (56864)
வை.ஜெகதீஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர்.



## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
55, சீனியர் லேன்,
கலட்டி அம்மன் கோயிலடி,
யாழ்ப்பாணம். (56851)

## விற்பனைக்கு

HONDA கார் 301-xxxx உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 61, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
**T.P.: 222 5349** (56829)

## மீண்டும் ஆரம்பமாகிறது

**கல்வியாண்டு 2007**
தரம் 6 முதல் O/L வரையான
**கணித வகுப்புகள்**
ஆரம்பம்: 16.12.2006 சனி
முற்பகல் 10 மணிக்கு
இடம்: பல்குணன்லாலா (லாலா)
ஆசிரியர் இல்லம், (சி/51541)
முகாந்திரம் ஒழுங்கை, மல்லாகம்.


## தவறிவிட்டது

கோப்பாய் வடக்கு, கொப்பிலாவத்தையைச் சேர்ந்த கந்தையா ஆனந்தராசா என்பவரது விசேட அடையாள அட்டை யாழ். பண்ணை மீன் சந்தையடியில் பேர்ஸ்உடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து அல்லது தொலைபேசி இலக்கம் 021 4591810 உடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.



## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.
தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.
(சி/50463)


## யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

**ஆங்கில பாட ஆசிரியர் தேவை**

எமது பாடசாலையில் ஆரம்பப்பிரிவிற்கும், இடைநிலைப்பிரிவிற்கும் ஆங்கிலப்பாடம் கற்பிப்பதற்கு இரண்டு ஆசிரியர்கள் தேவை. தகுதியானவர்கள் 22.12.2006 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும். இளைப்பாறிய ஆங்கில பாட ஆசிரியர்களுக்கும் [illegible] முன்னுரிமை வழங்கப்படும்.

(56839) - அதிபர்.

## முதலாம் ஆண்டு நினைவு கூர்ப்பு

மலர்வு 02 04 1946 — உதிர்வு 27 11 2005



**அமரர் அப்பையன் கந்தசாமி (சிற்றம்பலம்)**
(தபால் ஊழியர் - நெல்லியடி தபாலகம்)

அன்பான உங்களது அன்பு மொழி - எம்
அகம் தன்னில் அழியாது நிலைக்குதப்பா
சிறப்பான வாழ்வுக்கு வழியைக் காட்டிய எம் தெய்வமே!
சிறகிழந்த பறவைகள் ஆனோம் என்ன செய்வோம் அப்பா!

உச்சில் ஒழுங்கை, கரவெட்டி தெற்கு.
என்றும் உங்கள் நினைவில் வாழும்: குடும்பத்தினர். (56852)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 02 04 1967 — மறைவு 01 11 2006



**அமரர் சதாசிவம் தயாபரன்**

"ஐ ஒன்பதாள்கள் ஆகியும் ஆற முடியவில்லையே அப்பா
காணத்தான் துடிக்கின்றோம் ஓடோடி வந்திடுவீர்
ஆறிடுமோ என் துயரம் ஆறாத என்துயரம்
நீங்காத உன் நினைவுகளோடு....."

இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரிகைகளிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிளுவானை ஒழுங்கை, கோப்பாய் மத்தி. (56856)
பிரிவால் துயருறும்: மனைவி, மகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 18 01 1935 — உதிர்வு 17 11 2006



**அமரர் சந்திரசேகரம்பிள்ளை குலசிங்கம்**
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

17.11.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் தலைவர் சந்திரசேகரம்பிள்ளை குலசிங்கம் அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து, எங்களது துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 17.12.2006 ஞாயிற்றுக்கிழமை 214, கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி ஆராதனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

214, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர். (56849)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 10 1934 — மறைவு 15 11 2006



**அமரர் முருகர் நாகமணி**

15.11.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்தும், அனுதாபச் செய்திகளைப் பத்திரிகைகளில் தெரிவித்தவர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலமாக ஆறுதல் தெரிவித்தும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணேஸ்வரம் வீதி, குளமங்கால், மல்லாகம்.
- குடும்பத்தினர். (56844)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## மலையகத்தில் விதி வரைந்த கோலம்

இலங்கைத் தீவின் நிர்வாக அதிகாரம், சுதந்திரத்தின் பெயரால் பிரித்தானிய ஆட்சியாளரிடமிருந்து சிங்களப் பெரும்பான்மையினரிடம் கைமாறியதை அடுத்து, இலங்கையில் பௌத்த - சிங்களப் பேரினவாதம் மேலாண்மை பெற்றது என்பது சரிதம்.

பேரினவாதக் கொடூரத்தின் முதல் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் ஈழத் தமிழர்கள் என்பதைவிட, மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் என்பதே கசப்பான உண்மை. இந்தத் தீவின் சுபீட்சத்துக்காக சுமார் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேல் வியர்வையும், இரத்தமும் சிந்தி உழைத்த ஒரு சமூகத்தைச் சேர்ந்த - பத்து லட்சம் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு, அவர்கள் நாடற்றவர்களாக - நாதியற்றவர்களாக - நடு வீதியில் நிறுத்தப்பட்டார்கள்.

நாடற்றோர் என்ற இழிநிலைக்கு முழுத் தொழிலாளர் வர்க்கமுமே தள்ளப்பட்டது. இந்தத் தீவின் பொருளாதாரத்தை முண்டு கொடுத்து நிமிர்த்திய தொழிலாளர் சமூகத்துக்கு நாடாளுமன்றக் கதவுகள் இழுத்து மூடப்பட்டன.

தாம் இழைத்த அநீதியை - அதன் காரணமாகத் தமது இனம் சுமக்கும் இந்த அவமானத்தை - துடைப்பதற்காக சில சமாளிப்புச் சட்ட ஏற்பாடுகளைச் சிங்கள அரசுகள் பின்னர் காலத்துக்குக் காலம் செய்ததாயினும், தீவின் பொருளாதாரத்தை மேம்படுத்திய அந்தச் சமூகத்தின் பொருளாதார மீட்சிக்கு எதுவுமே செய்யப்படவில்லை என்பதும், தொடர்ந்தும் அரசியல் ரீதியாக மட்டுமன்றி, வாழ்வாதார வகையிலும், சுரண்டப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்ட சமூகமாகவே மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதும் கசப்பான உண்மை.

அந்த மெய்மை நிலைமையின் வெளிப்பாடே மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இன்று சம்பள உயர்வு கோரித் தாமாகவே கிளர்ந்தெழுந்து நடத்திவரும் போராட்டங்கள்.

தொழிற்சங்கங்கள், அவற்றின் தலைமைகள், அவை வழங்கும் உத்தரவாதங்கள், விடுக்கும் அச்சுறுத்தல்கள் அனைத்தையும் தூசு எனப் புறமொதுக்கித் தவிர்த்து, மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இரு வாரங்களாகத் தமது சம்பள உயர்வு கோரும் போராட்டத்தைத் தாமே முன்னெடுத்து நடத்தி வருகின்றனர்.

1992 ஆம் ஆண்டு தனியார் முகாமைத்துவக் கம்பெனிகளிடம் தோட்டங்கள் கையளிக்கப்பட்டன. அரச நிர்வாக முறைமைக்குள் உட்பட்டிருந்த தோட்ட நிர்வாக அமைப்பு முறை, தனியார் நிறுவனங்களின் நிர்வாக முறைக்கு மாற்றம் பெற்றது.

இதன்போது ஏற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கென்றே 1993 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களை அதிகளவில் அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள தொழிற்சங்கங்களும், தனியார் முகாமைத்துவக் கம்பெனிகளை உள்ளடக்கிய முதலாளி மார் சம்மேளனமும் கூட்டு சம்பள ஒப்பந்தம் ஒன்றை நடைமுறைப்படுத்த முன்வந்தன.

இந்தச் சம்பள ஒப்பந்தம் காரணமாக 1939 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த - வாழ்க்கைச் செலவுப் புள்ளி அடிப்படையிலான சம்பள உயர்வு, பின்னர் 1986 முதல் வழங்கப்பட்டு வந்த வாழ்க்கைச் செலவுக்கான அலவன்ஸ் கொடுப்பனவாக மாற்றப்பட்டது. அதுவும் பின்னர் ரத்துச் செய்யப்பட்டது. இதற்குப் பதிலாக தேயிலை விலை விற்பனைக்கு ஏற்ற அலவன்ஸ் என்ற புதியமுறை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் விளைவைப் புரியாமல் முதலாளிமாரிடம் தொழிற்சங்கங்கள் ஏமாந்தன; ஒரு வகையில் விலை போயின.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்படி கூட்டு ஒப்பந்தம் மீளச் செய்யப்படும் எனவும் அந்தக் கால கட்டத்தில் எதுவித சம்பள உயர்வும் தொழிலாளர் தரப்பில் கோரக் கூடாது என்பதும் தொழிற்சங்கங்கள் இணங்கிய இந்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இதனால், பொது ஊழியர்களுக்கு 1995 ஆம் ஆண்டு அரசு வழங்கிய 250 ரூபா சம்பள உயர்வும், 2000 ஆம் ஆண்டு வழங்கிய 400 ரூபா சம்பள உயர்வும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இல்லாது போயின.

இத்தகைய ஒப்பந்தம் ஒன்றுக்கு இணங்கி, தொழிலாளர்களுக்கு மோசமான நிலைமையை உருவாக்கியவர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்கக் கூட்டு அமைப்பினர் போன்றோர் என்றால் அது தவறில்லை.

இச்சங்கங்கள் அன்று பொறுப்பற்ற போக்கில் இழைத்த தவறுகள் இன்று இக்கட்டான சூழலைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளன.

அன்று - தீர்க்கதரிசனமற்ற வகையில் - முதலாளிமார் சம்மேளனத்துடன் இணங்கிப்போன இச்சங்கங்கள் இன்று தமது சமூகத்துக்காக முதலாளிமார் தரப்பிடம் பிச்சையேற்கக் கையேந்தும் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில் -

சம்பள விவகாரம் தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் - கைச்சாத்திட முடியாத தொழிற்சங்கங்கள் - என்ற நிலையில் இரு பிரிவுபட்ட தொழிற்சங்கப் பலப்பரீட்சையும் மலையகத்தில் இன்று அரங்கேறுகின்து.

ஒருபுறம் முதலாளிமார். மறுபுறம் இரு அணிகளின் தொழிற்சங்கங்கள். நடுவில் பாக்குவெட்டியின் இடுக்கில் மாட்டிக் கொண்ட பாக்கின் நிலைக்கு மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் முற்றுப் பெற்ற மலையக சம்பள உயர்வு ஒப்பந்தம் இதுவரை புதுப்பிக்கப்படவேயில்லை. தமது சம்பள உயர்வு விடயம் குறித்து தொழிற்சங்கங்கள் மூலம் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை மலையகத் தொழிலாளர்கள் இழந்து வருகின்றார்கள்.

இந்நிலையிலேயே 'தன்கையே தனக்குதவி' என்ற ரீதியில் தனித்துவமாகப் போராட அவர்கள் முடிவு செய்து, இரு வார காலமாக இந்தப் போராட்டத்தைப் பல்வேறு வடிவங்களில் நடத்தி வருகின்றன.

சுயநல நோக்கங்களுக்காக சம்பள ஒப்பந்தத்தின் உண்மைத் தன்மையை வெளிக்கொணராது, முதலாளித்துவ ஏகபோகத்துக்குத் தொழிலாளர்களைப் பலிக்கடாவாக்கிய முழுமையான பொறுப்பும் அம்மக்களின் தனித் தலைமைக்கு உரிமை கோரும் இ.தொ.காவையும், அதன் தலைவர்களையுமே சாரும் என்பதும் -

இந்தத் தலைமைகளின் தவறுகளால் தொழிலாளர்கள் இன்று வீதிக்கு இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதும் - மலையகத்தின் விதிவரைந்த கோலம் என்பது கண்கூடு!

# காத்தான்குடியில் களேபரம்; பொலிஸ் நிலை மீது தாக்குதல்

### துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்; 8 பேர் காயம்

கொழும்பு,டிச.15

காத்தான்குடி நகரில் அமைந்திருக்கும் 'தரிக்கத்துல் முப்லிகீன்' அமைப்பின் அலுவலகக் கட்டடத்தை இடித்து அகற்ற நூற்றுக்கணக்கானோர் முயற்சித்ததை அடுத்து அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். எட்டுப் பேர் காயமடைந்தனர்.

சர்ச்சைக்குரிய கட்டடத்தை தகர்க்க கும்பல் கும்பலாக முஸ்லிம்கள் முயன்றபோது பொலிஸார் அவர்களைத் தடுத்து விரட்டினர். ஒரு கட்டத்தில் தடியடிப் பிரயோகமும், துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த சிலர் வன்முறையில் ஈடுபட்டனர். இதனைக் கட்டுப்படுத்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

காத்தான்குடியில் உள்ள 'தரிக்கத்துல் முப்லிகீன்' அமைப்பின் அலுவலகக் கட்டடம் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது என்றும், அதனை காத்தான்குடி நகரசபை இடித்து விட வேண்டும் என்றும் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கிய தீர்ப்பு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலேயே நேற்று அங்கு வன்செயல்கள் இடம்பெற்றன.

கட்டடத்தைச் சூழ்ந்துகொண்டு அதனை இடிக்க முயன்றோரை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலர் காயமடைந்தனர். காத்தான்குடி பிரதான வீதியால் பயணித்த அரச போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றை வழிமறித்த சிலர் அதில் இருந்த பயணிகளை இறக்கிவிட்டு பஸ்ஸைத் தீ மூட்டி எரித்தனர்.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வீதியில் ஒன்று திரண்டு நின்று கட்டடத்தை இடித்துவிட வருமாறு ஊர் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். ஆனால், தொடர்ந்தும் அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைக் கலைக்கத் தொடங்கினர்.

காத்தான்கு[illegible] நட்வின் சந்தியில் அமைந்துள்ள [illegible] லிஸாரின் சோதனைச் சாவடி ஒன்று [illegible]க்களால் உடைக்கப்பட்டது. அத்[illegible] சர்ச்சைக்குரிய அமைச்சரின் 4 கடைகளும், 3 வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இக்கலவரத்தை அடக்குவதற்காக பொலிஸார் நேற்றுப் பகல் முதல் இன்று காலை 6 மணிவரை பொலிஸ் ஊரடங்குச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைப் பெற்றுத்தருமாறு காத்தான்குடி நகரசபை ஜனாதிபதியிடமும் அமைச்சர்கள் சிலரினதும் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. (சு)

## பரீட்சை நிலையங்களுக்குச் சென்று! மாணவருக்கு வைத்திய சிகிச்சை

ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சிக்குன் குனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டமை அறிந்து, யாழ்.சுகாதார சேவைகள் பகுதியின் நடமாடும் பிரிவினர் நேற்று மூன்று பரீட்சை நிலையங்களுக்குச் சென்று உடன் சிகிச்சை அளித்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, புனிதசாள்ஸ் மகா வித்தியாலயம் ஆகிய பரீட்சை நிலையங்களில் தோற்றிய மாணவர்கள் சிக்குன் குனியா காய்ச்சலால் பாதிக் கப்பட்டுள்ளனர்.

அது குறித்து கல்வி வலயப் பணிப்பாளர் மூலம் தகவல் அறிந்த அரச அதிபர் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரனுக்குத் தெரியப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து நடமாடும் சேவை மூலம் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

டாக்டர் யோகேஸ்வரன் தலைமையில் வைத்தியக் குழுவினர் மூன்று பரீட்சை நிலையங்களுக்கும் சென்று காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மாணவர்களுக்குச் சிகிச்சை அளித்தனர்.

பரீட்சை எழுதும் மாணவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பது அறிந்தால் உடன் சுகாதாரத் திணைக்கள நடமாடும் சேவைக்கு அறிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

## சாதாரண தர மாணவர்களுக்கு விசேட மருத்துவ வசதிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.15

குடாநாட்டில் சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்டுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு நேற்று முதல் மருத்துவ சேவையை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் 173 நிலையங்களில் மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை எழுதி வருகின்றனர்.

அந்த மாணவர்களில் பெரும்பாலானோர் சிக்குன் குனியாவால் பீடிக்கப்பட்டு பரீட்சை நிலையங்களில் அவதியுற்று வருகின்றனர் என அமைச்சர் டக்ளஸிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு மாணவர்களுக்கு அவசர மருத்துவ உதவிகளை வழங்க அமைச்சு முன்வந்துள்ளது.

இதற்குரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நேற்றுமுதல் நடமாடும் மருத்துவ முகாம்களை நடத்தி மாணவருக்குச் சிகிச்சைகளை அமைச்சு வழங்கி வருகின்றது. - என்றுள்ளது. (1-203)

## யாழ். நகர மத்தியில் புதனிரவு புடைவைக்கடையில் துணிகரக் கொள்ளை

யாழ். நகர மையப் பகுதியில் - மத்திய பஸ் நிலையத்தை அண்மித்ததாக - அமைந்துள்ள பிரபல புடைவைக் கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இந்தத் துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ்.மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள இந்தப் புடைவைக் கடையின் பின்புறமாக ஏணி ஒன்றைப் பொருத்தி அதன் வழியாக ஏறிக் கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெறுமதி மிக்க கூறைச் சேலைகள், விலை உயர்ந்த சேலை மற்றும் ஷேர்ட் வகைகள், டெனிம் வகைகள் உட்பட சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான புடைவைகளைத் திருடியுள்ளனர்.

நீண்ட நேரமாகக் கடைக்குள் தமது நேரத்தைச் செலவிட்டுள்ள திருடர்கள் அங்கிருந்த உடுபுடைவைகளில் மிகச் சிறந்தவற்றைத் தெரிவுசெய்து எடுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை உரிமையாளர் கடையைத் திறந்தபோதே கடை உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க புடைவைகள் களவாடப்பட்டமை தெரியவந்தது.

"திருடர்கள் விட்டுச் சென்ற ரோச் லைட், சிகரெட் துண்டுகள் என்பன கடைக்குள் காணப்பட்டன.

இது தொடர்பாகக் கடையின் உரிமையாளர், யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(அ-8)

## பருகொலைகள்

**பருத்தித்துறையில்**

நெல்லியடி,டிசெ.15

பருத்தித்துறை நாலாம் குறுக்கு வீதியில் நேற்று பிற்பகல் 12.15 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பருத்தித்துறை கடற்கரை வீதி, கோரியடியைச் சேர்ந்த தர்மதாஸ் மோகனதாஸ் (வயது 21) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சடலம் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (1-115)

**அல்லாரையில்**

யாழ்ப்பாணம், டிசெ.15

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் - கடற்றொழிலாளி ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கச்சாயைச் சேர்ந்தவரான நடராஜா ஜெயந்திரன் (வயது-40) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவர் கச்சாய்க் கடலில் கடற்றொழில் செய்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்கள் இவரை இடைமறித்துச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுப் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(203-8-15)

## நத்தார் தினத்தையொட்டி விடுமுறை வழங்க அறிவுறுத்து

**வணிகர் கழகம் விடுத்துள்ளது**

யாழ்ப்பாணம்,டிசெ.15

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யலாம் என்று யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் வணிகர் கழகம் கேட்டுள்ளது.

31ஆம் திகதிக்குப் பின்னர் ஞாயிறு, போயா தினங்களிலும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக நிறுவனங்களை மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் சகல வர்த்தகர்களையும் யாழ்.வணிகர் கழகம் மேலும் கேட்டுள்ளது. (1-203)

### நாளை

மார்கழி 01
சனிக்கிழமை
16.12.2006
திதி : ஏகாதசி
பிற்பகல் 04.41
நட்சத்திரம் : சுவாதி
முழுவதும்
சுபநேரம் : 03.22 - 04.52
ராகுகாலம் : 09.22 - 10.52

## மினிபஸ் சேவை இன்றுமுதல் யாழ்.நகரில் இருந்து இடம்பெறும்

யாழ்ப்பாணம்,டிசெ.15

தனியார் மினிபஸ் சேவை இன்று முதல் யாழ்.நகர பஸ் நிலையத்தில் இருந்து நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

[illegible] வாரங்களாக யாழ்.முற்றவெளியில் இருந்து சேவையில் ஈடுபட்ட மினிபஸ்கள் இன்று தொடக்கம் யாழ்.நகர பஸ் நிலையத்தில் இருந்து சேவைகளை நடத்தும் என்றும் -

இதுவரை தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை பொருட்படுத்தாது ஒத்துழைப்பு வழங்கியமைக்கு பிரயாணிகளுக்கு நன்றியைத் தெரிவிப்பதாகவும் - சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவை வரவேற்ற சாமன்யர் பாலா

தமது சாவை நிதர்சனத்தோடு எதிர்கொண்டவர் மதியுரைஞர் பாலசிங்கம்.

கடந்த மூன்றுவார காலமாக சாவுத் தேவனை வரவேற்க அவர் திடத்தோடும், தெளிவோடும், முழுப் பிரக்ஞையுடனும் தயாராக இருந்தமையை அக்கால கட்டத்தில் அவரது லண்டன் இல்லத்தில் அவருக்கு அருகில் மிக நெருக்கமாக அமர்ந்திருந்து - மனம்விட்டு - அவ்வப்போது நீண்ட நேரம் அவருடன் உரையாடியதன் மூலம் நிதர்சனமாக என்னால் உணர்ந்துகொள்ளமுடிந்தது.

அவரது வாழ்வின் எஞ்சிய காலம் நான்கு வாரங்கள் முதல் ஆறு வாரங்கள் வரைதான் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியிருக்கும் அதிர்ச்சித் தகவலை புன்முறுவலோடு என்னுடன் அவர் பகிர்ந்தபோதும்கூட சாவின் பயம் அவரை எட்டியதில்லை.

''சாவுக்கு நான் பயப்படவில்லை. அதன் பாதையில் வரும் நோவுக்குத்தான் அஞ்சுகிறேன்'' - என்று தனக்கே உரிய சொல்லாடலோடு அவர் கூறிச் சிரித்ததை என்னால் சகித்துக்கொள்ளமுடியவில்லை.

சாவுபற்றி அவரது கருத்தை 'விடுதலை' என்ற தமது நூலில் அவர் பதித்துள்ளதை நான் நினைப்பூட்டியபோது அந்தக்கருத்தை ஆங்காங்கே தொட்டு மீண்டும் அவர் வலியுறுத்தினார்.

அவரின் தத்துவக் கட்டுரைகள் அடங்கிய 'விடுதலை' நூலில் தத்துவாசிரியரான கைகேடகரை மேற்கோள்காட்டி பாலா எடுத்துரைக்கின்றார். அதையே தமது சாவுப் படுக்கையிலும் அவர் பகிர்ந்துகொண்டார்.

தமது மறைவுக்கு முன்னர் சாவுபற்றி அவர் குறிப்பிட்ட அம்சங்கள் சாவுவேளையிலும் அவரது கருத்தில் நிலைத்திருந்ததை என்னால் ஆழமாக உணரமுடிந்தது.

'விடுதலை' நூல் ஊடாக அவர் பிரதி பலித்த சாவின் நிதர்சனம் இதுதான்:-

காலத்தில முகிழ்கிறது வாழ்வு. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே விரியும் காலத்தில் நிலைக்கிறது வாழ்வு. இந்தக் காலம்தான் மனித இருப்பின் எல்லைக் கோட்டை இடுகிறது. இருத்தலின் எல்லைக்கு அப்பால் இல்லாமை இருக்கிறது. இல்லாமையை, அதாவது இருத்தலிலிருந்து இல்லாமல் போவதை, சாவு என்று சொல்கிறான் மனிதன்.

காலமும், நிலையாமையும், சாவும் மனித இருத்தலின் மெய்யுண்மைகள்.

இருப்பு என்பது காலத்தின் பாதையால் நடைபெறும் பயணம். இந்தப் பயணதில் நான் ஒரு கணமும் தரித்து நிற்கமுடியாதவாறு காலம் என்னை நகர்த்திச் செல்கிறது. நான் காலத்தில் மிதந்துகொண்டு பயணிக்கிறேன். நடந்து முடிந்தது இறந்தகாலமாகவும், நடக்கப்போவது எதிர்காலமாகவும், நடந்துகொண்டிருப்பது நிகழ்காலமாகவும் எனக்குத் தென்படுகின்றன. இறந்தகாலம் செத்துப்போனாலும், எனது அனுபவத்தின் நிழலாக அது என்னை சதா பின்தொடர்கிறது.

எனது வாழ்வனுபவம் எப்பொழுதுமே நிகழ்காலமாகவே கட்டவிழ்கிறது. எதிர்காலமானது, இறந்தகாலமாக மாறும் நொடிப் பொழுதுகளாக நான் நிகழ்காலத்தை அனுபவிக்றேன்.

நிகழ்கால அனுபவமே நிதர்சமானது; மெய்மையானது. ஆனால், மனிதன் நிகழ் காலத்தில் வாழாமல், எதிர்காலம் பற்றியே சிந்திக்கிறான். மனித ஆசைகளும், எதிர் பார்ப்புகளும், திட்டங்களும்

> ''சாவைச் சந்திப்பதற்கு மனிதன் துணியவேண்டும். அந்தத் துணிவிலும், தெளிவிலும், விழிப்பிலுமே மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக, நிறைவானதாக அமையும்'' - என்று தாம் முன்னர் உரைத்தபடியே சாவை அரவணைத்தவர் தத்துவாசிரியர் பாலசிங்கம்.

எதிர்காலத்தில் நிறுத்தப்பட்டிருப்பதால், மனித மனமானது எதிர்காலத்தை நோக்கியதாக, எதிர்காலத்தில் நிலைத்துப் போகிறது. செத்துப்போன காலத்தில் புதையுண்டுபோகாமலும், எதிர்காலத்தையே சதா எண்ணிக் கிடக்காமலும், நிகழ்காலத்தில் வாழ்வதுதான் அர்த்தபூர்வ மானது.

காலத்தில் நிகழும் எனது பயணம் சாவுடன் முடிவடைகின்றது.

நிலையற்ற இந்த உலகில், நிலையான ஒன்று உண்டு என்றால் அதுதான் சாவு. எனது உயிர்ப்பின் கணத்திலிருந்து சாவும் என்னோடு உடன் பிறப்பு எடுத்திருக்கிறது. எனது இருத்தலின் ஒவ்வொரு கணத்திலும் இல்லாமை என்ற சூன்யத்தை நான் எதிர் கொண்டு வாழ்கிறேன். எனது சாவை நான் பட்டறிந்துகொள்ள முடியாது. இந்த உலகில் அதுமட்டும் எனது அனுபவத்திற்கு அப்பாலானது. எனது அனுபவத்தின் முடிவாக, எனது இருத்தலின் முடிவாக, நான் இல் லாமல் போகும் இறுதிக்கணமாகச் சாவு என்னை எதிர்கொண்டு நிற்கிறது.

என்னைச் சூழ எங்கும் சாவு நிகழ்கிறது. மற்றவர்களது சாவை நான் நித்தமும் சந்திக்கிறேன். எனக்கு வேண்டியவர்கள், நான் பற்றுக்கொண்டவர்கள் மடியும்போது, துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்து கிறது. மனித இருப்பின் மிகவும் சோக மான, துன்பமான நிகழ்வாக சாவு சம்பவிக் கிறது.

எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலை யிலும் நான் சற்றும் எதிர்பாராத சந்தர்ப் பத்தில், சாவு எனது கதவைத் தட்டலாம். திடீரென, இருப்பிலிருந்து இல்லாமையென்ற சூன்யத்துக்குள் நான் தூக்கிவீசப்படலாம். எனது இருப்பின் நிலையாமை எனக்குத் தெரிந்தும்- சாவின் நிச்சயத்துவத்தை நான் உணர்ந்தும்- நான் அதுபற்றிச் சிந்திக்கத் துணிவதில்லை. மனித பயங்கள் எல்லாவற்றிற்கும் மூலபயமாக, தலையான பயமாக, மரண பயம் எனது ஆழ் மனக்குகைக்குள் ஒளிந்து கிடக்கிறது. நான் அதை அடக்கி, ஒடுக்கி, என் நனவு மன திலிருந்து ஒதுக்கி வைத்திருக்கிறேன்.

சாவு என்பது மனித இருப்பு நிலையின் தவிர்க்கமுடியாத உண்மை என்கிறார் கைகேடகர். அதை மறுப்பதும், அதற்கு அஞ்சுவதும், அதிலிருந்து ஓடி ஒளிந்துகொள்ளமுயல்வதும் அபத்தமானவை. சாவின் பிடியிலிருந்து எவருமே தப்பிவிடமுடியாது. அது வாழ்வின் ஒரு நிகழ்வாக என்றோ ஒரு நாள் எதிர்கொள்ளப்படவேண்டியது. சாவைச் சந்திப்பதற்கு மனிதன் துணியவேண்டும். அந்தத் துணிவிலும், தெளிவிலும், விழிப்பிலுமே மனித வாழ்வு அர்த்த முள்ளதாக, நிறைவானதாக அமையும்.

- என்று குறிப்பிட்டிருக்கின்றார் பாலா.

**- ந.வித்தியாதரன் -**

அதையே தமது சாவுப் படுக்கைக்கான ஆயத்த வேளையிலும் தத்துவத் தெளிவோடு பகிர்ந்துகொண்டார் அந்த மாமனிதர்.

தம் இறுதிக்காலத்தில் ஊடகவியலாளன் ஒருவனோடு மதியுரைஞர் பகிர்ந்து கொண்ட கருத்துகள் சரித்திரத்தேவை எழும் போது வெளிவரவேண்டியவை. ★

## தேசத்தின் குரல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலாண்ணையை நான் ஆழமாக நேசித்தேன் விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன். மோசமாகச் சுகவீனமுற்று தினம்தினம் சாவோடு போராடியபோதும், தாங்கமுடியாத உடல்உபாதைகளால் வருந்தியபோதும், தளர்ந்துபோகாத உறுதிப்பாடு அவரிடம் இருந்தது. அவரின் இந்த இலட்சிய உறுதி எனது நெஞ்சத்தைத் தொட்டுநின்றது. அவர் துன்பத்தால் துவண்டபோதெல்லாம் எனது ஆன்மாவும் கலங்கியழுதது.

எமது இயக்கத்தின் வளர்ச்சியிலும் அதன் இன்றைய விரிவாக்கத்திலும் பாலாண்ணைக்கு ஒரு நிரந்தரமான இடம் இருக்கிறது. ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, ஒரு தத்துவாசிரியராக எல்லாவற்றுக்கும் மேலாக எனது உற்ற நண்பனாக இருந்து எனக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்தவர். ஆலோசனையும் ஆறுதலும் தந்தவர். எனது உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு, எனது பழுக்களையும் பங்கிட்டுக்கொண்டவர். எமது விடுதலை இயக்கம் தோற்றம்பெற்ற ஆரம்பகாலம் முதல் என்னோடு இருந்து, எல்லாச் சோதனைகளையும் வேதனைகளையும் சவால்களையும் சங்கடங்களையும் தாங்கிக்கொண்டவர். எமது அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு மூலாதாரமாக, முன்னால் நின்று செயற்பட்டவர்.

ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து, எமது தேசசுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பாலாண்ணையின் மாபெரும் போராட்டப்பணிக்கு மதிப்பளித்து "தேசத்தின் குரல்" என்ற மாபெரும் கௌரவப்பட்டத்தை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். பாலாண்ணை உண்மையில் எம்மை விட்டுப் போகவில்லை. அவர் எமது நினைவலைகளில் என்றும் நீங்காத நினைவுகளாக நிலைத்து நிற்பார் - இப்படி தலைவர் பிரபாகரனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## புதனன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

லண்டனில் அவரது துணைவியாரோடும், வன்னியில் புலிகளின் தலைமையோடும் கலந்துபேசி இறுதிக்கிரியை ஏற்பாடுகள் குறித்து தீர்மானிக்கும் முயற்சியில் சம்பந்தப்பட்டோர் ஈடுபட்டிருந்தனர்.

செவ்வாய்கிழமைவரை மலர்ச்சாலை ஒன்றில் வைக்கப்படும் அவரது புகழுடல் புதனன்று பிரம்மாண்டமான லண்டன் அலெக்ஸாண்டிரா மாளிகை மண்டபத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படலாம் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

அதன் பின்னர் அவரது புகழுடல் தீயுடன் சங்கமமாகும். பின்னர் அவரது அஸ்தி, அலெக்ஸாண்டிரா மாளிகைத் தோட்ட நந்தவனப் பகுதியில் தூவப்படும் எனத் தெரிகின்றது.

இறுதிக் கிரியைகளில் நோர்வேயின் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் உட்பட பல பிரமுகர்களும், பல்வேறு புலம்பெயர் நாடுகளில் இருந்து வரும் பல்லாயிரக் கணக்கான தமிழர்களும் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர்குழு அமைக்கப்பட்டது. ஆனால், இக்குழு தமது வேலையை விட்டுவிட்டு வேறு வேலை செய்திருக்கின்றது என்றே எமக்குத் தோன்றுகிறது.

இப்பரிந்துரைகள் தயாரிக்கப்படுவதற்குமுன் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுடன் இந்நிபுணர் குழு கூடி ஆராய்ந்திருத்தல் வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யாது தமது விருப்பப்படி துண்டு துண்டாகப் பிரிந்து இந்நிபுணர் குழு இப்பரிந்துரைகளைத் தயாரித்திருக்கின்றது.

இப்பரிந்துரைகளைத் தயாரிப்பதற்கு மாத்திரமன்றி தயாரித்த பின் அவற்றை ஊடகங்களில் பிரசுரிப்பதற்கும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுடன் நிபுணர் குழு கலந்தாலோசிக்கவில்லை.

இந்தப்பரிந்துரைகளுக்கும்அரசிற்குமிடையில் எந்தத் தொடர்பும் கிடையாது. இருப்பினும் இதை அரசு சர்வகட்சி மாநாட்டில் ஆராய்ந்து இது தொடர்பாக ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வரும்.

இதேவேளை, சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இருந்து ஜே.வி.பியினர் விலகியமை கவலையளிக்கின்றது. அவர்கள் மீண்டும் இக்குழுவில் இணைவார்கள் என நாம் நம்புகின்றோம் - என்றார்.

(ஐ-7)

## மதியுரைஞர் பாலா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடும்நோய்ப் பாதிப்புகளுக்கு மத்தியிலும் தமிழரின் விடுதலைப்போராட்டத்திற்கான தனது அறிவுசார் பங்களிப்பை வழங்கி வந்த பாலசிங்கம் கடுமையான புற்றுநோயி னால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்ற தகவல் கடந்த சில வாரங்களுக்கு முன்பே வெளியாகியிருந்த நிலையில் அவர் நேற்று சாவை அணைத்துக்கொண்டுள்ளார்.

அன்ரன் பாலசிங்கம் அவர்களின் சாவுச் செய்தியை அடுத்து புலம்பெயர் தமிழர்கள் துக்கத்தில் மூழ்கியுள்ளனர். தமிழர் தாயகத்திலும் அச்செய்தி நேற்று முன்னிரவு மெல்ல மெல்லப் பரவி தமிழர் தாயகம் துக்கத்தில் மூழ்கியது.

மதியுரைஞர் பாலசிங்கத்தின் மறைவு தொடர்பாக அவரது இல்லத்திலிருந்து ஓர் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

தமிழ் மக்களையும், தமிழீழ மண்ணையும் ஆழமாக நேசித்து, கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இதயத்தில் விடுதலைக் கனலை சுமந்து, இறுதிவரை ஓயாது உழைத்த, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான மதிப்புக்குரிய அன்ரன் பாலசிங்கம் இன்று வியாழனன்று காலமாகியுள்ளார்.

தமிழினத்தின் அடிநாதமாக, தமிழீழத் தேசியத் தலைவரின் குரலாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூச்சாக நின்ற, மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இன்று எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். இன்று பிற்பகல் 1.45 மணிக்கு, மதியுரைஞரின் உயிர் மண்ணுலகில் இருந்து பிரிந்தது.

தனது சொல் வன்மையாலும், ராஜதந்திர மதியூகத்தாலும், அணையாத விடுதலை வேட்கையாலும், தமிழீழ மக்களையும், உலகத் தமிழர்களையும், ஆட்கொண்ட மதியுரைஞர், இன்று எம்மைவிட்டு பிரிந்து சென்றுள்ளார். எல்லோரது இதயத்திலும் இடியாக விழுந்துள்ள மதியுரைஞரின் பிரிவால் தமிழினம் துடித்து நிற்கின்றது.

சத்தியத்தை சாட்சியாக வரித்து, தணியாத விடுதலை வேட்கையுடன் வாழ்ந்து வீறுகொண்ட விடுதலைப் போராட்டத்தை அடிநாதமாகக் கொண்டு தமிழ் மக்களை ஆழமாக நேசித்து, தமிழீழத்தின் ராஜகுருவாகத் திகழ்ந்த மதியுரைஞரைப் பிரிந்து, தமிழினம் ஆற்றுப்படுத்த முடியாத துயரில் மூழ்கியுள்ளது. உயரிய சத்தியத்திற்காக வாழ்ந்து, விடுதலைக்கு விதையாகி வீழ்ந்த மதியுரைஞர் கலாநிதி அன்டன் பாலசிங்கம் என்றென்றும் ஈழத்தமிழர்களின் வரலாற்றில் நிலைத்து நிற்பார் - என்று தெரிவிக்கப்பட்டது.

அன்ரன் பாலசிங்கத்தின் தந்தையார் மட்டக்களப்பு மண்டூரைச் சேர்ந்த குழந்தை வேலு மார்க்கண்டு. அவர் அங்குள்ள பிரபல முருகன் ஆலய பூசகர்களின் வழித்தோன்றல்.

தமது பணி நிமித்தம் யாழ்.குடாநாட்டிற்கு வந்திருந்தவேளை கிறிஸ்தவப் பெண்ணான பாலசிங்கத்தின் தாயாரை அவர் சந்தித்து காதல் மணம் புரிந்தார்.

பாலா 1938ஆம் ஆண்டு மார்ச் 4ஆம் திகதி பிறந்தார். தாயின் விருப்பப்படி ஸ்ரனிஸ்லஸ் என்றும் தந்தையின் ஆசைப்படி பாலசிங்கம் என்றும் இரண்டையும் சேர்த்து ஸ்டனிஸ்லஸ் பாலசிங்கம் என அவருக்குப் பெயர் சூட்டப்பட்டது.

பிற்காலத்தில் கல்விக்காக யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் அவர் சேர்க்கப்பட்ட போது அவரது தந்தையாரின் பெயருக்கு கிறிஸ்தவ நாமம் சூட்டப்பட்டது. அதுவே அன்ரன் ஆகும். அதன்படி அவரது நாமம் அன்ரன் ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம் என்றாயிற்று.

ஆரம்பத்தில் பத்திரிகைத்துறையில் ஈடுபாடுகொண்ட ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம் சில ஆண்டுகள் வீரகேசரியில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர்.

சிரித்திரன் சுந்தர் முதல்கொண்டு தமிழ்ப் பத்திரிகைத்துறையின் மூத்த ஜாம்பவான்களான அமரர் எஸ்.டி.சிவநாயகம் மற்றும் கே.கே.இரத்தினசிங்கம், எஸ்.நடராஜா, டேவிட்ராஜு போன்றவர்களோடு அவ்வேளையில் நெருங்கிப் பழகியவர்.

'பிரம்மஞானி' என்பது உட்பட பல் வேறு புனைபெயர்களில் ஆழமான தத்துவக் கட்டுரைகளை அவர் தொடர்ந்து எழுதினார்.

பின்னர் சில ஆண்டுகள் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் அவர் செய்தித் தொடர்பாளராகப் பணியாற்றினார். அக்காலத்தில் அங்கு பணியாற்றிய தமிழ்ப் பெண் ஒருவரை காதலித்து ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம் திருமணம் செய்தார். இருவரும் பின்னர் லண்டனில் வாழ்க்கையைத் தொடங்கினர்.

அங்கு - லண்டனில் - ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கத்தின் முதல் மனைவி சிறுநீரக நோய்த் தாக்கத்துக்கு இலக்கானார். அவரது சிறுநீரகங்கள் செயலிழந்தன. செயற்கை முறையில் சிறுநீரைப் பிரித்தெடுக்கும் கருவியுடன் மனைவியார் வாழவேண்டியவரானார். அப்போது அந்தக் கருவியை இயக்கும் மருத்துவ முறைப் பயிற்சியைப் பெற்றுத்தேர்ந்து, தாமே தமது முதல் மனைவிக்கு நீண்டகாலம் - வருடக் கணக்கில் - மருத்துவ சிகிச்சை உதவிகளைச் செய்துவந்தார்.

பின்னர் தமது முதல் மனைவி மறைய லண்டனில் தத்துவவியல் கலாநிதி பட்டப்படிப்பை ஆரம்பித்த காலத்தில் அடேல் அம்மையாரை அவர் சந்தித்து திருமணம் செய்துகொண்டார். இருவரது திருமண வாழ்வும் கடந்த 28 ஆண்டுகளாக இணைபிரியாத பந்தமாக நேற்றுவரை வளர்ந்தது.

70களின் பிற்பகுதியில் சுதந்திரத் தமிழீழம் குறித்தும் சோஷலிசப் பாதை பற்றியும் அவர் வெளிப்படுத்திவந்த கருத்துகள் அவரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேசியத் தலைவர் பிரபாகரனையும் சங்கமிக்கவைத்தன.

அப்போதுமுதல் இறக்கும்வரை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆன்மாவாக அவரது குரல் ஒலித்தமை உலகறிந்த விடயம்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை வில்வராஜா

[ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ். இந்துக்கல்லூரி]

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல. 06 செல்லர் வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை வில்வராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ். இந்துக்கல்லூரி) நேற்று (14.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - தையல்முத்து தம்பதியரின் ஏகபுத்திரனும் சோமசுந்தரம் - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் நந்தினி, பிரபாகர், மனோகர், சுதாகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நற்குணராசா, தனேஸ்வரி, தயானி ஆகியோரின் அன்பு மாமனும் சரோஜினி, செல்வராணி ஆகியோரின் சகோதரரும் திவ்வியா, பிரணவி, பிரவீன், நரேந்திரன், பிரணவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 6, செல்லர் ஒழுங்கை,
செம்மணி வீதி, நல்லூர்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

### கந்தையா சிவலிங்கம் (J.P)

**[இளைப்பாறிய உள்ளகக் கணக்காய்வாளர், சிமெந்து கூட்டுத்தாபனம், லக்சுமி ஓர்கனேஷன் - BATA மொத்த விற்பனை நிலைய முகாமையாளர்]**

ஏழாலை மேற்கைச் சேர்ந்த கந்தையா சிவலிங்கம் நேற்றிரவு காலமானார்.

அன்னார் சிவநேசமணியின் அன்புக் கணவரும், குமுதினி (லண்டன்), தர்சன் (கொழும்பு), டினேசன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:
**மனைவி.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org